## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 32/2013 |
| Prosecution Witness | : | அ.சா. 9 |
| Name | : | இருதயமேரி |
| Father's/Husband Name: | : | சவரிநாதன் |
| Address : | : | திருவானைக்கோவில், திருச்சி |
| Age | : | 72 /2024 |

**தேதி: 02/09/2024**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு. S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(எதிரிகள் 1,2 ஆஜர் . 3வது எதிரி ஆஜர் இல்லை. கு,வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சார்பதிவாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருச்சியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் சம்பவத்தன்று செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். பெரம்பலூர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து வந்த கடிதத்தைப் பெற்று ஜான்சிராணி என்பவருடைய பொது அதிகாரப்

பத்திரத்தின் நகலை வழங்கினேன் மற்றும் கீழ்க்கண்ட ஆவணங்களை வழங்கினேன்.

**18/03/2010 தேதியிட்ட நான் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடித எண் 37/2010 அ.சா.ஆ. 9 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.**

**17/08/2008 தேதியிட்ட ஏசுவடியான் பெயரிலுள்ள பொது அதிகாரப் பத்திரத்தின் ஜெராக்ஸ் அ.சா.ஆ. 10 ஆகவும்**

**17/08/2008 தேதியிட்ட ஏசுவடியான் பெயரிலுள்ள பொது அதிகாரப் பத்திரத்தின் ஜெராக்ஸ் அ.சா.ஆ. 11 ஆகவும்,**

**03/07/2008 தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் ஜெராக்ஸ் அ.சா.ஆ. 12 ஆகவும்**

**03/07/2008 தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் ஜெராக்ஸ் அ.சா.ஆ. 13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மேற்க்கண்ட ஆவணங்கள் எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக என்னை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

போலீசாரிடமிருந்து 05/03/2010 அன்று ஆவணங்களைக் கேட்டு கடிதம் வந்தது என்றால் சரிதான். நான் போலீசாருக்கு அனுப்பி வைத்த ஆவணங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டபோது நான் அந்த அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விதம் குறித்து என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். நான் அனுப்பி வைத்து ஆவணங்கள் என்னால் அசலுடன் ஒப்பிட்டுப் பார்த்ததாக அலுவலக முத்திரை மற்றும் கையெழுத்து செய்து அனுப்பவில்லை என்றால் சரிதான்.

மேற்கண்ட ஆவணங்களை வைத்து ஜான்சி கையெழுத்து என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

JM-I, PBLR